# தாயிற் சிறந்த தயாபரன்




டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்
எம்.பி.

கருணையும்
தயாளமும்
கலந்து பிறந்த
கழகத் தாய் நீ!
அதனால்தான்
இதயத்தைப் போல
ஈரமாய் நிற்கிறாய்!

எலும்பும் நடுக்கும்
உறைகுளிரில்
இழுத்து போர்த்திக்
கொள்ள
இமைகளைத் தவிர
ஏதுமில்லா
ஏழைத் தாயாருக்கு
மழலைக் குழந்தையாய்
மாராப்பாக்கி வரும்
கிராமத்து
மகளிருக்குக்
கட்டணமில்லாப்
பேருந்துப் பயணத்தை
ஆட்சியேற்ற
அடுத்த நொடியே
முதல் கையெழுத்துப்
போட்டு அவர்கள்
தலையெழுத்தையே
மாற்றிய தாய் நீயல்லவா
தமிழகம் சேயல்லவா!

தனக்குவமையில்லாத்
தனிப்பெரும் இறைக்கு
உவந்து ஓர்
உவமை சொன்னார்
அடிகள்!

பால் நினைந்து
பரிவுடன் ஊட்டும்
தாய் என்றுதான்
தமிழில் சொன்னார்!
சேய்க்குப்
பாலூட்டும்
தாய் தன்னை
அறிவோம்!

ஆட்சியில்
அடியெடுத்து வைத்த
ஆரம்ப நாளிலேயே
பால் விலைக்
குறைத்துச்
சேய்க்கு மட்டுமல்ல
தாய்க்கும்
பால் வார்த்த
தயவுச் சுரபி நீதான்
ஆண்
தாய்ப் பிறவி நீதான்!

பணக்காரர்கட்குப்
பசியெடுக்க மாத்திரைகள்
பட்டினி தீர்க்கத்தான்
பரம ஏழைகளுக்கு
சிரம யாத்திரைகள்!

நிடத நாட்டு மன்னன்
நெஞ்சு நிறை காதலி
தமயந்திக்கு
அன்னத் தூதாக
அன்றைக்கு
அனுப்பினான்!

ஊபநிடத நாட்டு
மன்னர்களோ
அன்னத்திற்காகத்
தமயந்திகளையே
அனுப்புகின்ற
பற்றாக்குறையால்
பசிநெருப்பு
பற்றுகின்ற
பரிதாப நிலை அறிவோம்!
வாழ்வுக்கே
வகையற்றோர்
சொல்கிறார்கள்

'எங்கள் வீட்டில்
அடுப்புக்கும்
பூனைக்கும்
கலப்புத் திருமணம்
எங்கள் வயிறே
அக்கினி சாட்சி'

'குடிப்பிறப்பு அழிக்கும்
விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப்
பெரும்புனை விடூஉம்
நாணனி களையும்
மாணெனில் சிதைக்கும்
பூணனி மாதரொடு
புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும்
பாவி' என
மணிமேகலை காப்பியம்
உலகின் அனைத்துப்
பாவங்களுக்கும்
காரணம் பசிப்பிணி
என்கிறது!

'கார் நடக்கும்
படி நடக்கும்
காராளர் தம்முடைய
ஏர் நடக்கும்
என்னில்
இயல், இசை
நாடகம் நடக்கும்
ஊர் நடக்கும்
உயிர் நடக்கும்
பார் நடக்கும்
பசி நடக்க மாட்டாதே'
என்றே
கவிச் சக்கரவர்த்தி

விவசாயி
பசிப்பிணி போக்க
விவசாயக் கடன்
தள்ளுபடி
பயிர்க்காப்பீடு
உரமானியம்
தந்த எங்கள்
தளபதியே!
உலகிற்கு
ஊட்டும்
உழவர்க்கே
ஊட்டுகின்ற
ஆண்
மணிமேகலை நீ!
உன் ஆட்சி மாத்திரம்
அட்சய பாத்திரம்!

தாயிற் சிறந்த
கோவில் இல்லை
என்று ஔவை
ஏன் பாடினாள்?

காரணம்
அவளிடத்தில் தான்
கருவறை இருக்கிறது
கர்ப்பக் கிரகம்
இருக்கிறது!

கோவிலுக்கு
வெளியே
சாம்பலாய் இருக்கிறது
உள்ளே
திருநீறாகி விடுகிறது!

கோவிலுக்கு
வெளியே
வெறுநீர்
உள்ளே
தீர்த்தமாகி விடுகிறது!

ஆலயத்திற்கு
வெளியே
அது
வெறும் சாதம்!
உள்ளே
பிரசாதம் ஆகிறது!

படையல்
பண்டத்தைப்
பரம்பொருள்
தீண்டுவதில்லை!

ஆனால்
வெறுஞ் சாதம்
எப்போது
பிரசாதம்
ஆகிறது தெரியுமா?
பசித்தோர்
கரம்
தீண்டும் போதுதான்
சாதம்
பிரசாதம் ஆகிறது!
தாயுமானவனாய்
நீ
இருப்பதால்தான்
அனைத்துக்
கோவில்களிலும்
அன்னதானம்
நடக்கிறது!

தாயின்
கருவறைக்குள்
குழந்தை இருக்கையில்,
அடிப்படைத் தேவைகள்
உணவு, உடை
உறையுள்
ஆகிய மூன்றும்
குழந்தை கேட்காமலே
நிறைவேறி விடுகிறது!

அன்னையின்
வயிற்றில் குழந்தை
அழுகுரல்
எப்போதாவது
கேட்டிருக்கிறதா?

குழந்தைக்கு
வெளியே ஊட்டப்படும்
உணவு
வாய்வழியே சென்று
கழுத்துவழி இறங்கி
சிறுகுடல் பெருங்குடல்
மார்க்கமாக இரைப்பை
வந்து அடைகிறது!

தாயின்
கருவில் இருக்கும்
பிஞ்சுப் பிறைநிலாக்
குஞ்சுக் குழந்தைக்கு
வெளிக்குழந்தை
போலின்றி
குழந்தைக்கு உள்ளே
வயிற்றில் உள்ள
தொப்புள் என்ற
வாய் வழியாக
தொப்புள் கொடி
மூலமாக நேரடியாக
ஊட்டுகிறாள்!

தொப்புள்தான்
நாம்
உணவுண்ட
முதல் வாய்
அது
வயிற்றில் இருக்கிறது!

அதனால்தான்
தரணியில்
தமிழர் மட்டுமே
கருவுற்ற பெண்களை
வாயும்
வயிறுமாயிருக்கிறாா்
என்கிறார்கள்.

தொப்புள் கொடி
வழியே
குழந்தைக்கு
உணவு கிட்டி
விடுகிறது!

அன்னையின்
கருப்பையே
முதல்
ஆடையாகக்
கிடைத்து விடுகிறது!

தன் குழந்தை
நிர்வாணமாய்
இருக்கக்
கூடாதென்று
ஏற்கனவே
கருப்பை
என்ற
ஆடையைத்
தைத்து
வைத்திருப்பதால்தான்
பெண்ணைத்
தையல் என்கிறார்கள்!

ஆக ஆடை
கிடைத்து விடுகிறது!
தாயின் வயிறே
குழந்தைக்கு
வீடாக அமைந்து
விடுகிறது!

ஆகத்
தொப்புள் கொடியே
குழந்தையின்
உணவு, உடை,
உறைவிடம் ஆகிய
மூன்று
அடிப்படைத்
தேவைகளையும்
கோரிக்கை
வைக்காமலேயே
வழங்கி விடுகிறது!

தளபதியாம் எங்கள்
தாயே
உன்
கருப்பு சிவப்புக் கொடி
தமிழினத்தின்
தொப்புள் கொடி!

அரசுப்பள்ளி
மாநகராட்சிப் பள்ளி
அரசு உதவி பெறும்
பள்ளி
காலைச் சிற்றுண்டி
வழங்கிடும்
சீருடை வழங்கும்
குடிசைகள்
இல்லாத் தமிழகம்
என்ற
கலைஞர் வீடு தரும்
கனவுத் திட்டம்
வாயிலாக
ஏழைகட்கு
இலட்சோப லட்சம்
வீடு கட்டித்தரும்
நீதான்
வீடு பேறு தரும்
தாயுமானவன்
அம்மையப்பன்!

குழந்தை
தாயின்
வயிற்றிலிருந்து
வந்தவுடன்
அ,ஆ என்று
தமிழின்
அகர முதல் எழுத்தை
உச்சரித்தப்படி தான்
வெளியே வருகிறது!

ஆமாம்
உன்
உதயசூரியன் ஆட்சி
உதிக்கும் வரை
கருவறைக்கு
வெளியில்தான்
தமிழ் ஒலித்தது!

நீ வந்த பிறகு தான்
அனைத்து சாதியினரும்
அர்ச்சகராகலாம் என்ற
அற்புதச் சட்டத்தால்
கருவறைக்குள்ளே
தமிழ்த்தாய்
நுழைவு
தடையின்றி நிகழ்கிறது!
கர்ப்ப கிரகத்தில்
தேவாரம், திருவாசகம்
திவ்யப் பிரபந்தம்
தேனாய் ஒலிக்கிறது!
திசையெங்கும்
இனிக்கிறது!

ஆகக்
கருவறைக்குள்ளே
தாயைக் குடியேற்றிய
தாய் நீதான்!

தந்தை பெரியார்
இதயத்தில்
தைத்திருந்த முள்
உன்னால்தான்
எடுத்தெறியப்பட்டது
இன இழிவு நீங்கியது!

குறிஞ்சி, முல்லை
மருதம், நெய்தல் என
நானிலம் அறிவோம்
புதிதாகக்
கோவில் நிலம்
என்ற ஒன்றை
நீதானே மீட்டாய்!

கோடிக்கணக்கில்
சூறையாடப்பட்ட
கோவில் சொத்துக்கள்
நீதானே மீட்டாய்!

உன்னது
ஆட்சி இல்லை
தாயின் மீட்சி!

முடிஆட்சியில்
பட்டத்து யானை
இருந்திருக்கலாம்!

ஆனால்
ஆட்சிக்கு
மதம் பிடிக்காமல்
இருக்க வேண்டும்!
ஆட்சிக்கு சமயம்
இல்லை!

ஆட்சியாளனுக்கு
மதம் இல்லை
இது திராவிட மாடல்!

ஆட்சிக்குச்
சமயம் இருந்தால்
மதம் இருந்தால்
அது
ஆரிய மாடல்!

முழுகாத
தாய் இல்லை!

குட முழுக்கில்லாத
கோவில் இல்லை
இது
அம்மையப்பனான
உன்
சாதனைதான்!

ஆயிரமாயிரம்
கும்பாபிசேகம்
நடத்தும் நீதான்
கர்ப்பக் கிரகத்தின்
கண்ணியம் காக்கிறாய்!

உன்னால்
கும்பாபிசேகம்
செய்ய முடியா
ஆலயம்
அறிவாலயம் மட்டும்
தான்!

நாத்திகன்
உன்
ஆட்சியில்தான்
ஆண்டவனே
பாதுகாப்பாக
இருக்கின்றான்!
அவதாரம்
பாதுகாப்பாய் இருப்பது
தாயின்
கருவறையில் தானே!

கண்ணை விளக்காக்கி
கையைத் தொட்டிலாக்கி
கருத்தைக் காவலாக்கி

குழந்தை
விழித்திருக்கும்போது
விழித்திருந்து
குழந்தை
தூங்கும்போதும்
விழித்திருந்து
குழந்தைக்கு நோய்
வந்தால்
தான் மருந்து சாப்பிடும்
தாய்க்கு நிகராக
எவரும் இல்லை!

எட்டுக் கோடித்
தமிழ்ப் பூக்களைத்
தாங்கும் ஒற்றை
உயிர்க் காம்பு
நீதான்!

உன் ஆட்சி
தாய்ப் பால் போலத்
தூயது!

கட்டில் சிறை
தொட்டில் சிறை
அட்டில் சிறை
ஆணையே நம்பி
இருக்கும்
ஆயுள் சிறை
அனைத்துச்
சிறைகளிலிமிருந்து
தாய்க் குலத்திற்கு
எப்போதுதான்
விடுதலை?
என்ற கேள்வி
உரிய விடை
உன்னால்தான்
கிடைக்கிறது!

பெண்ணிற்கு
பிறப்பிலிருந்து
ஆணே பகை
ஆண் குழந்தை
என்றால்
தாய்ப்பால்
பெண் குழந்தை
என்றால்
கள்ளிப்பால்
இது என்ன
அறத்துப் பால்?
காரணம்
பொருட்பால்
ஆமாம்
பிறப்பிலிருந்து
அடிமைப்படுத்தும்
ஆணே பகை
பெண்ணுக்குப்
பெண்ணே பகை?
இதிலிருந்து
விடுதலை தரவே
மகளிர்க்கான
உரிமைத் தொகை!

அது
வெறும்
பணத்தொகை அல்ல
பண்புத் தொகை!

ஆமாம்
அதனை வழங்கிய
நீதான்
கருணை நிதியும்
தயாளமும்
கலந்து பிறந்த
கனிந்த தாய்!
இரத்தத்தினால்
மனிதர் ஒன்றென்பார்!
ஆனால்
அது சரியில்லை!

இரத்தம் கூட
A, A+, B, B பாசிட்டிவ்
என
இரத்தம் கூட
மனிதரை
வேறுபடுத்தும்
கூறுபோடும்!

ஆனால்
தன் சாதிக் குழந்தைக்கு
மட்டுமில்லை

வெள்ளைக்கார தாய்
நீக்ரோ குழந்தைக்கு
ஊட்டினாலும்

மஞ்சள்
சீனக்குழந்தைக்கு
கறுப்பினத்தாய்
ஊட்டினாலும்

தாய்ப்பால் பொருந்தும்.
தாய்ப்பால் மட்டுமே
தரணியில்
மனிதம் ஒன்று
என்பதை
மறுப்பின்றி
உணர்த்தும்!

தாயான
உன்னைத்
தமிழகம் மட்டுமில்லை
இந்தியா
முழுக்க ஏற்றுக்
கொள்கிறது!

தாயின் பாதத்திற்குக்
கீழே
சொர்க்கம் இருக்கிறது
என்றார் நபிகள் நாயகம்

தாயே
உன் திருவடிக் கீழே
தான்
தமிழ்நாடு
சொர்க்கமாயிருக்கிறது!